உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



திருவெம்பாவை உரையாடலும் திருப்பள்ளி எழுச்சி உரையும்

...நகைமைத் தமிழ் ஆசிரியர்
...நசிகர் அவர்களால்
...ரை
...ப்புரம்
...ராபதி முதலியார் அவர்களின்
மணிவிழா வெளியீடு
3—2—53

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை உரையாடலும்;
திருப்பள்ளி எழுச்சி
உரையும்.

திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளித்
தலைமைத் தமிழ் ஆசிரியர்;
வித்வான் மு. இரத்தின தேசிகர் அவர்களால்
எழுதப்பெற்றன.

திருவாரூர் மடப்புரம்,
உயர் திரு, **நா. ருத்ராபதி முதலியார்**
அவர்களின்
மணி விழா வெளியீடு.

திருவாரூர்.
3—2—53



ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

1/4

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

பூவின் தேன் இனிமை தந்து ஊனிற் கலக்கும்; திருவாசகத்தேன் ஊனிற் கலந்து உயிரிலும் கலக்கும். பூவின்தேன் உவட்டும்; திருவாசகத்தேன் ஆரா அமுதாய் என்றும் இனிக்கும். மனத்தைக் கரைக்கும்; மும்மலத்தைக் கெடுக்கும்; கருங்கல் மனத்தைக் கனிவிக்கும்; ஆனந்தக் கண்ணீர் மணற்கேணியிற் பெருகச் செய்யும்; மெய்மயிர் சிலிர்க்கச் செய்யும்.

இத்திருவாசகத்தேன் சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாந்திருமுறையாகும். இதனைத் தந்தருளிய மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அமாத்ய அந்தணர் குலத்தில் தோன்றி, இளமையிலேயே வேத சிவாகமங்களை ஓதியுணர்ந்து, உலகியல் ஞானத்தையும் கொண்டு அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராய்த் திகழ்ந்தார். புற உலகில் தொடர்புடையார்போலிருந்தும் இறைவன் அருளையே பெரிதும் நாடி நின்றார். பாண்டிய மன்னனுக்குப் பரித்திரள் வாங்கச் சென்றபோது இவரது பக்குவத்தை அறிந்து இறைவன் குருவடிவில் தோன்றி, திருப்பெருந்

துறையில் ஆட்கொண்டு அருளுபதேசம் செய்தார். உலகியலில் முற்றும் நீங்கிய சுவாமிகள் திருவாசகத் தேனைச் சொரியத் தொடங்கி,

"சுற்றமும் தொடர்பும் நீத்தேம், துன்பமும் இன்பும் அற்றேம்
வெற்றுடல் மானம் தீர்ந்தேம், வெறுக் கைமேல் வெறுக்கை வைத்தேம்
செற்றமும் செருக்கும் காய்ந்தேம் தீவினை இரண்டும் தீர்ந்தேம்
கற்றைவார் சடையான் கோலம் காட்டி ஆட் கொண்ட அன்றே."

என்று சொல்லி அமைவாராயினர். இறைவனது திருவிளையாடலால், நரிகள் பரிகளாயின. பரிகள் நரிகள் ஆயின, வையையில் வெள்ளம் பெருகிற்று. வந்தியின் பிட்டை இறைவன் சுவைத்துப் பாண்டியனால் அன்பரின் பொருட்டுப் பிரம்படிபட்டார்.

பின்னர் சுவாமிகள் பல தலங்களுக்கும் சென்று அருட் பனுவல்களைப்பாடிப் பரசமய இருள் நீக்கித் தில்லையை அடைந்தார். கடை ஊழிவரும் தனிமையைக் கழிக்க எண்ணிய அம்பலக் கூத்தர் திருவாசகத்தில் ஒரு பிரதியைக் கைக்கொண்டருள வேண்டி, கையேட்டாளர் வேடம் தாங்கி வந்து சுவாமிகள் கூறிய திருவாசகத்தைப் படிசெய்தார். பின்னர், திருச்சிற்றம்பலக் கோவையாரையும் சுவாமிகள்பாட; படிசெய்தார். சுவாமிகளை அடியவர்கள் சூழ்ந்து நின்று திருவாசகத்திற்குப் பொருள்கூற வேண்டினர். சுவாமிகள் அண்டங்கடந்த பொருளாயும்—அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருளாயும்—பண்டும்—இன்றும்—என்றும் உள்ள பொருளாயும் உள்ள அற்புதத் தனிக்கூத்தாடும் ஐயனே பொருள் என்று கூறி—ஆனிமாத—மகநாளில்

தமது முப்பத்திரண்டாம் வயதில் இறையொளியில் கலந்தார்.

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலைய னேனையும் கோயில் வாயிலில்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்கு
உரிய னாக்கினாய் தாம் வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே.

திரு. நா. ருத்திராபதி முதலியார்

அவர்கள்

வாழ்க்கை வரலாறு

நிலமகளின் மனத் தாமரையாய் மலர்ந்தொளிர்வது நிறைசெல்வத் திருவாரூர். அதன் தென்மேல் பகுதியாய்த் திகழ்வது மடப்புரம் என்னும் இயற்கைத் தாயின் எழிற் பூங்கோயில். பல்வகைக் குடிகளும் பயிலும் இத்தலத்தே தொன்றுதொட்டு நின்றொளிரும் பழங்குடி "செங்குந்த முதன்மையார்" குடியாகும். இன்றைக்குச் சுமார் 75 ஆண்டுகட்கு முன்னர் இக்குடியில்; அரு. நாகப்ப முதலியார் என்ற பெரியார், செங்கமலத்தம்மாள் என்ற கற்புக்கு அரசியுடன் வாழ்ந்து வந்தார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்பது தமிழ்மறை அன்றோ! அன்னவர் செய்த அறத்தின் தகுதியால் நான்கு ஆண் மக்களையும் ஒரு பெண் மகவையும் பெற்றனர். ஆண் மக்கள் நால்வருள் நாலாமவரே இன்று மணிவிழாக் கொள்ளும் பெருந்தகையாளர் உயர்திரு ருத்திராபதி முதலியார் ஆவார்கள். மூத்தவர் குப்புச்சாமி முதலியார், அடுத்தவர் சிங்கார முதலியார், மூன்றுமவர் மாரிமுத்து முதலியார். உடன் பிறந்த அம்மையார் கருந்தாள் ஆச்சி ஆவார்கள்.

திரு. ருத்திராபதி முதலியார் அவர்கள் நந்தன ஆண்டு தைத் திங்கள் 23-ஆம் நாள் வெள்ளிக்கிழமை



மணி விழாக்கொள்ளும் திரு. நா. ருத்ராபதி முதலியார் அவர்கள்

உத்திர விண்மீன் பொருந்திய நன்னாளில் (3—2—1893) தோன்றினார்கள். இளமையிலேயே தமிழ்க்கல்வி பயின்று வாணிபத் துறையில் வாழ்க்கையைத் தொடங்கினார்கள்.

"வாணிபம் செய்வார்க்கு வாணிபம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்"

என்ற பொய்யா மொழிக்கு இணங்க, "கொள்வதும் மிகை கொள்ளாது, கொடுப்பதும் குறைபடாது பல் பண்டம் பகர்ந்து நற்பொருள் ஈட்டத் தொடங்கினார்கள். 1910-ல் முதல் முதல் கொட்டைப் பாக்கு வாணிபத்தைக் கூட்டு முறையில் தொடங்கி நடத்தினார்கள். 1920 முதல் தனித்த முறையில் பாக்கு வாணிபத்தை நடத்தத் தொடங்கினார்கள். 1942 முதல் திருவாரூரில் மளிகை வாணிபத்தைத் தொடங்கினார்கள். சென்னையில் அயல்நாடுகளுடன் ஏற்றுமதி—இறக்குமதி செய்யும் வணிக நிலையத்தை நிறுவினார்கள். வாணிப நுட்பத்தை நன்குணர்ந்து பெரும் பொருள் ஈட்டத் தலைப்பட்டார்கள்.

திரு. முதலியார் அவர்கள் 1914-ஆம் ஆண்டில் வலங்கைமான் முருகையா முதலியார் அவர்களின் திருமகளார் திருவாட்டி வேதம்பாள் அம்மாளைத் திருமணம் செய்து கொண்டார்கள். ஓர் ஆண் மகவையும்—இரண்டு பெண் மக்களையும் பெற்றார்கள். "பொற்பு அறிவில்லாத பல புத்திரப்பேறு எய்தலின்—ஒரு நற்புதல்வனைப் பெறுதல் நன்றாமே" என்ற நல்லுரை திரு. முதலியார் அவர்களின் வாழ்க்கையில் மெய்யாயிற்று. அன்னார் ஈன்றெடுத்த அருமைப் புதல்வர் திரு. பஞ்சநதம் அவர்கள் இன்று, "குதலைமை தந்தைகண் தோன்றின் தான் பெற்ற— புதல்வன் மறைப்பக்கெடும்" என்ற உண்மை உரைப்

படி, தந்தையாரின் முதுமைப் பருவத்தில் துணை புரிந்து வருகின்றார்கள். புட்பவல்லி என்ற ஒரு பெண் மட்டும் இன்று உண்டு.

திரு முதலியார் அவர்கள், பொருள் ஈட்டும் திறம் மிகப் படைத்தவர்கள். சாந்தம் – பொறுமை – கடவுட் பற்று முதலிய பண்புகள் அமையப்பெற்றவர்கள். எளியவர்களுக்கு ஈவதில் இன்பம் காண்கின்றவர்கள். மடப்புரம் ஸ்ரீ சோமநாதசுவாமி ஆலயத்தில் ஸ்ரீ சுப்பிரமணி சுவாமிக்கு ஆலயம் நிறுவிப் பூசை விழாக்களுக்கு உதவி வருகிறார்கள். திருமருகலில் கோயில்கொண்டுள்ள தமது குலதெய்வமாகிய அங்காளம்மனின் ஆலயத்தைப் புதுப்பிப்பதற்குப் பெருந்தொகை உதவியிருக்கின்றார்கள். மணிவிழாக்கொள்ளும் திரு முதலியாரவர்கள் இன்னும் பல்லாண்டுகள் சிறக்க வாழ்ந்து–நற்பொருள் ஈட்டி அறம்பல புரிய, எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பழநி, சைவசித்தாந்த சரபம்;
சித்தாந்த மஹாமஹோபாத்யாயா;
காசிவாசி-ஈசான சிவாச்சாரியர்
அவர்கள் அருளிய

முகவுரை

சிவாகம விதிப்படி சிவதீக்ஷைபெற்ற சைவர்கள் நியமமாக சைவானுட்டானத்திலும், சிவபூஜையிலும் ஓதுதற்குரிய மந்திரம் சம்ஹிதா மந்திரம் எனப்படும். அவை பஞ்சப்பிரம மந்திரமும் ஷடங்க மந்திரமும் ஆம். ஈசாநாதி ஐந்து மந்திரங்கள் பஞ்சப்பிரம மந்திரங்கங்கள் எனவும்—இருதயாதி மந்திரங்கள் ஷடங்க மந்திரங்கள் எனவும் கூறப்பெறும். இந்தப் பதினொரு மந்திரங்களுமே திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் பதினோராம் திருமுறையீறாகவுள்ள பதினொரு திருமுறைகளும் ஆம் என உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருமுறை கண்ட புராணத்தின் வாயிலாக அருளிச் செய்துள்ளார்கள். அந்தப் பதினொரு மந்திரங்களுள்ளே எட்டாவது மந்திரம் சிகா மந்திரம் ஆகும். [''மிருகேந்திரம்—பவுட்கரம்—அறுவருரை''— உருவருள் — சித்தியார் பாட்டு உரை காண்க.]

இந்தச் சிகா மந்திரமாகக் குறிக்கப்படுவது திருவாசகத் திருமுறையேயாகும். சிகா மந்திரம் என்றமையினாலேயே அதன் சிறப்பு நன்கு புலனாகும். இந்தத் திரு

வாசகத் திருமுறையினுள்ளே, ஒவ்வொரு பகுதிக்கும் "சிவனது அனுதி முறைமையான பழமை" என்பது போன்ற பல தலைப்புக்களுள்ளே பல தத்துவக் கருத்துக்கள் புலப்படுத்தப்பெற்றுள்ளன. அந்த முறையிலே திருவெம்பாவை என்ற தலைப்பு, சக்தியை வியந்து கூறுதலாகும். சக்தியை வியந்து கூறுதலாவது தத்தமக்கு உரிய செயல்களைச் செய்யும் வண்ணம் இயக்குதலே யாகும். சுத்த மாயையாலே சிவசக்தி நேரே நின்று இயக்குதலும் அசுத்த மாயையிலே அனந்தேசுவரர் வாயிலாக இயக்குவித்தலும், பிரகிருதி மாயையிலே ஸ்ரீகண்டருத்ரர் வாயிலாக இயக்குவித்தலும் என அவை முத்திறப்படும்.

பிரபஞ்சம்

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனேடு எண் வகையாய்ப் புணர்ந்து
நின்ருன்
உலகேழெனத்திசை பத்தெனத் தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

என்ற திருப்பாட்டினுலே எண் வகைப்படும். பிருதுவி—அப்பு—தேயு—வாயு—ஆகாயம் — சூரியன்—சந்திரன்—சிவன் என்ற இவை எட்டும் இயங்குதலே உலகம் தொழிற்படுதலாம். அவ்வெட்டும் தொழிற்படுதல் வாமை முதலிய எண் வகைச் சக்திகளால் ஆகும்; அந்த எண்வகைச் சக்திகளுள்ளும் சர்வபூததமனியை மனேன்மனி தொழிற்படுத்தவும்; பலப்பிரதமனியை — சர்வபூததமனி தொழிற்படுத்தவும்; பலவிகரணியைப் பலப்பிரதமனி தொழிற்படுத்தவும்; கலவிகரணியைப் பலவிகரணி தொழிற்படுத்தவும்; காளியைக் கலவிகரணி தொழிற்படுத்தவும்; ரௌத்ரியைக்காளி தொழிற்படுத்தவும்; சேட்டையை ரௌத்ரி தொழிற்படுத்தவும்;

வாமையைச் சேட்டை தொழிற்படுத்தவும்—இப்படியாக எண்வகைச் சக்திகள் தொழிற்படும். வாமை முதலிய சக்திகளினுலேயே, பிருதி வியாதிதத்துவங்கள் தொழிற் படுவனவாம். இவையெல்லாம் சிருஷ்டி காலத்திலே தத்தமக்குரிய காரணங்களிலே நின்றும் காரிய ரூபமாகத் தோன்றி வெளி வருதலும் சங்கார காலத்திலே தத்தமக்குரிய காரணங்களிலே சூக்குமமாக ஒடுங்குதலும் ஆகும். இவ்வொடுக்கத்தை இரவெனவும்—தோற்றத்தைப் பகல் எனவும் சமய நூல்கள் கூறும். உலக அனுபவத்திற்கும் இஃது இயைந்ததே.

அம்முறையே மனிதர்களுக்கு இரவு பகல்கள் இயல்பாய் இருத்தல் போலத் தேவர்களுக்குத் தக்ஷிணுயனம் இரவாகவும், உத்தராயணம் பகலாகவும் கொள்ளப்படும். முன் வினையின் பயனை அனுபவிக்கும் முகத்தால் மேல் வினையை ஈட்டிக் கொள்வோர் மக்கள் ஆவர்; சிவ போதச் சேட்டிப்பினுலே சத்கருமங்களைச் செய்வோருக்கு மேல்வினை ஏருமையாலும் முன் வினை உடல் ஊடாகக் கழிதலாலும், அவர்களது வாழ்க்கை தேவ வாழ்க்கையாகக் கருதப்பட்டு மேலே சொன்ன வகையால் அவர்களுடைய காலம் தேவமானத்துட்பட்டு நடைபெறுவதாகும். இம்முறையே உத்தராயண காலமாகும் தை மாதம் பகற் காலத்திற்கு முதற்காலம் ஆதலால்; அதற்கு முன்னே உள்ள மார்கழி மாதம் விடியற் காலமாகும். பகலில் நல்ல உழைப்பெடுத்துக் கொண்டவர்கள், இரவிலே கருவி கரணங்கள் ஓய்வு பெறும் வண்ணம் நித்திரை செய்தலையும், அங்ஙனம் நித்திரையில் ஓய்வு பெற்று விடியற் காலத்தில் நல்ல பலத்துடன் எழுந்து தொழில் செய்தலையும் நாம் உலக அனுபவத்தில் காண்கின்ருேம் அன்ருே! அங்ஙனம் தொழில் புரிவோரை வைத்துத் தொழில் படுத்துவோர்

தமது தலைவன் குறிப்பின் வழியே நின்று தமக்குக் கீழுள்ளோரைத் தொழிற்படுத்திப்பயன் காணுதலை உலகானுபவத்தில் வைத்துக் காணுதல் போலவே சிவசக்தி சங்கற்பத்தின்வழி, மனோன்மனி சர்வ பூததமனியையும்; சர்வ பூத தமனி பலப்பிரத மனியையும்; பலப்பிரத மனி பல விகரணியையும்; பல விகரணி கலவிகரணியையும்; கலவிகரணி காளியையும்; காளி ரௌத்ரியையும் ரௌத்ரி சேட்டையையும்; சேட்டை வாமையையும் தொழிற்படுத்த, வாமை பிருதிவியையும்; சேட்டை அப்புவையும்; ரௌத்ரி தேயுவையும்; காளி வாயுவையும்; கலவிகரணி ஆகாயத்தையும்; பலவிகரணி சூரியனையும்; பலப்பிரதமனி சந்திரனையும்; சர்வ பூததமனி ஜீவனையும்; தோற்றுவிக்க, உலகம் காரிய ரூபமாக வெளிப்பட்டு அவற்றிலே ஆன்மாக்கள் தனுகரண புவன போகங்களைப் பொருந்தி இன்புறும் என்க. இங்ஙனம் ஆன்மாக்களுக்குப் போக போக்கியங்கள் நிகழும் முறையில் சிவ தீர்த்தங்களில் மூழ்குதலும் சிவாலய சேவை செய்தலும் சிவபெருமானுடைய குணமகிமைகளை வயாரப் பாடுதலும் கேட்டலும் சிவபெருமானை விதிப்படி பூசித்தலும் ஆகிய இம்முறைகளாலே இரு வினையொப்பும்—மலபரிபாகமும்—சத்திநிபாதமும் சிவானுக்ரகமும் பொருந்தி, சிவபெருமானுடைய திருவடிப் பேறுவந் தெய்து மென்க. ஆன்மாக்கள் பெறுதற்குரிய பேறுகளுள்ளே தலை சிறந்த பேறு இதுவே.

இதற்குரிய சாத்திய மந்திரங்களே திருவெம்பாவைப் பாடல்கள் என்னும் திருமந்திரங்களாகும். இவைகளை மார்கழிமாதம் விடியற் காலத்திலே நியமமாக ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரங்களைத் தரித்து சைவானுட்டானம் புரிந்து ஓதி இம்மை மறுமை இன்பங்களைச் சைவநன் மக்கள் பெறுவார்களாக. இந்த அரும்பெரும் சிறப்பி

னவாகிய திருவெம்பாவைப் பாசுரங்களை இக்காலத்துச் சைவப் பெருமக்கள் உளங்கொளப் பயிலும் வண்ணம் இவற்றின் நுண் பொருள்களையெல்லாம் தெய்வக் கற்பின் நல்லார் ஒருவரை ஒருவர் துயிலுணர்த்தி நீராடி இறைவனைத் துதிக்கும் முறையில் வைத்து இனிய செந்தமிழ் நடையிலே திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியார் வித்வான் மு. இரத்தினதேசிகர் எழுதியுள்ள இவ்வுரையாடற் பகுதியும் – திருப்பள்ளியெழுச்சியின் உரைப்பகுதியும் சைவ உலகத்திற்குப் பெரிதும் பயன்படுவனவாகும். இவற்றை எழுதிய நமது அன்புருவாகிய தேசிகர் அவர்களுக்கு ஸ்ரீ மணிவாசகப் பெருமானுடைய திருவருளினாலே சைவ நலங்கள் வளர்வனவாக என்று அப்பெருமான் பொன்னடிப்போதுகளைப் போற்றுகின்றேன்.

இவற்றைச் சிறந்தமுறையில் அச்சியற்றித் தமது அறுபதாண்டு நிறைவு விழா நினைவு வெளியீடாகச் சைவ உலகிற்குத்தர முன்வந்த—மடப்புரம் திரு. ருத்திராபதி முதலியாரவர்கட்குச் சகல நலங்களும் திருவருட்பெருக்கால் எய்தும் வண்ணம் வந்திப்போமாக.

உ

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவைக் கருத்து

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையும் இரவும், தை மாதம் முதல் ஆனி மாதம்வரை பகலுமாகத் தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஸம்ஹார காலத்திற்கும் சிருஷ்டி காலத்திற்கும் பிரமாணமாக இந்த ஆறுமாதமும் பிரிந்து நடக்கும். மார்கழி மாதம் உதயகாலமாய்ச் சிருஷ்டிக்கேதுவாயிருக்கும்.

பிரபஞ்ச சிருஷ்டியைத் திருவுளத் தடைத்துவயிந்தவ சக்தியைச் சிருஷ்டிக்கத் தொடங்கும், அவசரம் திருப்பள்ளி எழுச்சி என வழங்கும்.

இனி, அந்தச் சுத்தமாயை நாதமாகவும், விந்துவாகவும், சாதாக்கியமாகவும், மகேசுரமாகவும், சுத்த வித்தையாகவும் அஞ்சுதலமாக இருக்கும். நாதமாகிய தலத்திலே பரமும், விந்துவாகிய தலத்திலே பரையும் அதிஷ்டிக்கும். சாதாக்கியமாகிய தலத்திலே சதாசிவமூர்த்தி எழுந்தருளியிருப்பர். போகாங்கிகளாகிய அணுசதாசிவர் சேவிக்கவும், இதன் கீழே ஈசுவரற்கதிஷ்டானமாகிய மகேசுரதலத்திலே அனந்தாதி அஷ்டவித்தியேசுரர் சேவிக்கவும். இதன் கீழே உருத்திரமூர்த்திக்கு அதிஷ்டானமாகிய சுத்தவித்யா தலத்திலே மந்திரேசுவரர் சேவிக்கவும், இப்படி பிரபஞ்ச அனுக்ரக காரியமாகப் பராசக்தியிற்றோன்றிய ஞானமும் கிரியையும் ஒத்த இச்சையே திருமேனியான சதாசிவமூர்த்தியின் திருவருளால், அந்தமாகேச்சுவர தத்துவத்திலே சத்தி மண்

டலத்திலிருந்த மனோன்மனி என்னும் சத்தி சர்வ பூத தமனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பலப்பிரமதனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி கலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி காளியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி ரௌத்ரியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி ஜ்யேஷ்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க, இப்படி நவ சத்தி களின் பிரேரகத்தினுல் மாயையை அதிஷ்டித்திருக்கிற அனந்த தேவராலே அசுத்தமாயை காரியப்பட்டுப் பிரு திவிமுடிவான பிரபஞ்சகாரியம் நடவா நிற்கும். (பிரே ரிக்க ஏவ, காரியப்படுத்த. அதிஷ்டித்திருக்கிற,—நிலைக் களமாகக்கொண்டு செலுத்துகிற.)

திருவெம்பாவையின் வரலாறு

ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலை யிலே எழுந்தருளியிருந்தபொழுது மார்கழி மாதம் விடி யற் காலத்தில் மாதர்கள் ஒருங்கு சேர்ந்து ஒருவர் வீட் டிற்கு ஒருவர் சென்று துயிலெழுப்பிக்கொண்டு கூட்ட மாகப் போய்க் குளத்தில் நீராடினுர்கள். அதைக்கண்ட சுவாமிகள் அவர்கள் சொன்னதாக இத்திருவெம்பாவை யைப் பாடியருளினுர்.

திருவெம்பாவையின் பாரயண காலம்

தினந்தோறும் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னுவது, இரண்டரை நாழிகைக்கு முன்னுவது, ஒன்றேமுக்கால் நாழிகைக்கு முன்னுவது நித்திரை விட்டெழுந்து புறத்தே சென்று இயன்ற அளவு சுத்தி செய்துகொண்டு வடக்கு முகமாகவேனும் கிழக்கு முக மாகவேனும் இருந்து விபூதியை நெற்றியில் தரித்துக் கொண்டு, கணபதியையும் குருவையும் நமஸ்கரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சத்யாநுசாரம் ஜபித்து மக்கள்

சிரத்தா பக்தியோடு இதைப் பாராயணம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்ய அனுகூலப்படாதாயின் மார்கழி மாதத்திலாவது அவசியம் செய்ய வேண்டும். அங்ஙனம் செய்வோர் சிவபெருமானது கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரராய்த் திருவருள் ஞானம் பெறுவரென்பது திண்ணம். ஒவ்வொரு நாளும் விடியற்காலம் இருபத்தைந்து நாழிகை முதல் முப்பது நாழிகை வரையில் தேவகாலமாதலால் அக்காலம் ப்ராம்ஹீ முகூர்த்தம் எனப் பெயர் பெறும். அக்காலமே சிவத்தியானத்துக்கு மனந்தெளியும் காலம். அக்காலத்தில் விழித்திருக்கின் நோய்களும் அணுக அஞ்சும். சிவனுராணையும் இது.

[சித்தாந்த சைவ சரபம்—சோளங்கிபுரம்—ஸ்ரீ-ல-ஸ்ரீ-சிவ அருணகிரி முதலியாரவர்களால்-ஆயது]

ஆக்கியோன் உரை

திருவாசகத்தேனின் ஒரு துளி "திருவெம்பாவை இது சத்தியை வியந்ததாகும் மெய்யடியாருள்ளத்தில் இன்று" திருவெம்பாவை, தனியிடம் பெற்று வருகின்றது. திருவாசகம் போன்ற ஞான நூல்களுக்கு உரை காணப் புலவர் பெரு மக்கள் அஞ்சுகின்றனர். ஆயினும், அவ்வப் போது சிற்சில பேரறிஞர்கள் தத்தம் உள்ளங்களில் தோன்றும் கருத்துக்களைக் கொண்டு திருவாசகத்திற்குப் பொருள் கூறியிருக்கின்றனர். இன்றைய மொழிநிலை மக்கள் உள்ளத்து எளிமையைப் புகுத்திவிட்டது. தமிழ்ச் செய்யுள் உறக்கம் கொண்டது இன்று எழும் ஒரு சில பாடல்களும் உரை நடைகளாகவே காட்சியளிக்கின்றன. எனவே இன்றுள்ள நிலையில் 'திருவெம்பாவையின்' பொருளை உணர எளிய முறையில் ஏதேனும் செய்ய முடியுமா என்று எண்ணினேன். திருக்கோத்தும்பி, திருச்சாழல், திருவுந்தியார்– திருப்பொன்னூசல் என்ற பகுதிகள் அமைந்திருப்பது போல் திருவெம்பாவையும், மகளிர் விளையாட்டு முறையில் மகளிர் நீராடி இறைவனை வழிபடும் முறையில் அமைந்திருப்பதைக் கண்டு மகளிர் தம்முள் உரையாடும் முறையில் எனது சிற்றறிவிற்கு எட்டிய வரையில் உரை வரைந்தேன்.

திருவாசகத்தேனின் மற்றொருதுளி "திருப்பள்ளி எழுச்சி" இது திரோதான சுத்தியைக் கூறியதாகும். மண்ணாளும் வேந்தனைத்துயிலுணர்த்துவதாய் புறப்பொருளில் ஒரு துறை உண்டு. அது "துயிலெடை நிலை" எனப்படும். ஒருநாமம் ஒருரூபம் ஒன்றுமிலாற்கு ஆயிரம் திருநாமங்கள் வழங்குதல் போல, உயிர்ப்பும்

பேச்சும் உறக்கமும் விழிப்பும் இல்லாத இறைவனைத் துயில் உணர்த்துவதாக, அன்பின் பெருக்கைக் காட்டும் ஒரு வாயிலாகக்கொண்டு பாடப்பட்டதே "திருப்பள்ளி எழுச்சி" என்ற பகுதி. இதற்கும் எளியேனுடைய அறிவிற்கு எட்டியவரையில் பொருள் எழுதினேன்.

இவற்றை இன்று சைவத்தில் தலைமைபூண்டு ஒளிரும்—சைவ சித்தாந்த சரபம்—காசி வாசி-மகாமகோபாத்யாய சிவ ஸ்ரீ ஈசானசிவாச்சாரிய சுவாமிகள் அவர்களிடம் காண்பித்தேன். என்போன்றவர்களை நன்னெறிப் படுத்தும் அருள் உள்ளம் படைத்த சுவாமிகள்—என் தகுதியையும் பாராது என்னை ஊக்கவேண்டும் என்ற ஒரே நோக்குடன், சிறந்ததோர் முகவுரை தந்தார்கள். அவர்களுடைய திருவடிகளை உளமாரவழுத்துகின்றேன்.

இவற்றை வெளியிடின் சைவ உலகிற்கு ஒரு சிறிதேனும் பயன்படும் என எண்ணினேன். திருவாரூர்—மடப்புரம், திரு. நா. ருத்திராபதி முதலியார் அவர்களைத் தமது மணிவிழா நினைவு வெளியீடாக இவற்றை அச்சியற்றி வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்களும் இசைந்தார்கள். அதன்படி இந்நூல் வெளிவருகிறது. எனது வேண்டுகோளுக்கு இணங்கிய திரு. முதலியாரவர்களுக்கு எனது நன்றி என்றென்றும் உரியதாகுக.

வித்வான் மு. இரத்தின தேசிகர்,
தலைமைத் தமிழ் ஆசிரியர்,
கழக உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை உரையாடல்

பூவுலகில் வாழும் மானிடர் ஆண்டு ஒன்று—தேவர்களின் ஒரு நாள். தைத்திங்களின் முதல் நாள் தேவர்களுக்குக் கதிரவன் தோன்றும் நேரம் ஒப்ப தாகும். அன்று தான் நாமும் புண்ணியத் திசை நோக்கிப் புறப்படும் (உத்தராயணம்) செங்கதிர்ச் செல்வனுக்குச் சிறப்புச் செய்து பொங்கல்விழா நிகழ்த்துகின்றோம். சூரியன் தோன்றும் நேரத்திற்கு முந்திய காலம் வைகறை எனப்படும். அந்த நேரமே சித்த விகாரக் கலக்கம் தெளிந்திருக்கும் நேரம். அந்த நேரமே பரம்பொருளை உள்ளப் பெருங்கோயிலில் எழுந்தருளச் செய்யும் நேரம்.

பிரபஞ்சம் ஒடுங்கித் தோன்றும் இயல்பினது. இவ்வொடுக்கத்தை இரவு என்றும், தோற்றத்தைப் பகல்என்றும் சமய நூல்கள் கூறுகின்றன. தேவமானப்படி மார்கழி மாதம் வரையில் உள்ள காலம் ஒடுக்கத்தை உணர்த்துவதாகும். தை மாதம் முதல் தொடங்கும் காலம் தோற்றத்தை உணர்த்துவதாகும். இத்தோற்

றம் சக்தியின் வாயிலாக நிகழ்வது. சிவபுரியிலே சக்தி சிவத்தை ஊக்குகிறது. சிவம் சக்தியை ஊக்குகிறது. இருவரும் ஒத்து உலகுயிர்களைத் தொழிற்படுத்துகின்றனர். நவசக்திகளும் ஒருவரை ஒருவர் துயில் உணர்த்துவார் போன்று பிரபஞ்சத் தோற்றத்தைப் புரிகின்றனர்.

முதற்சத்தி-மனோன்மணி-(*தன் தோழியரோடு கூடி*)

[நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
அத்தா போற்றி அரசே போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

என்று முழங்கிக்கொண்டு சென்று இரண்டாம் சத்தியாகிய சர்வபூததமனியைத் துயிலுணர்த்துகின்றாள்.]

மனோன்மணி:- வாட்கண்ணி! வாட்கண்ணி! இன்னுமா உறக்கம்! ஆதியந்தமில்லா அரும்பெரும் சோதியாம் பரம்பொருளை யாங்கள் பாடுவதைக் கேட்டும்கூட உறங்குகின்றாயே! உன்செவி என்ன வன்செவியா? (செவிடா) வீதியில் யாங்கள் நடந்து விம்மி! விம்மி! மெய்மறந்து, பெருமானின் திருவடிகளை வாழ்த்தும் ஒலியைக் கேட்டும்கூட, மலர்ப் படுக்கையிலேயே இருந்தவண்ணம் புரண்டுகொடுக்காமலே ஒன்றுக்கும் பயனற்றவளாய்க் கேவல நிலையில் இருக்கும் உயிர்போலச் செயலற்றுக் கிடக்கின்றாயே! இதுதானா உன் அன்பின் திறம்? எழுந்திரு! எழுந்திரு!

* **ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்**
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே [1]வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்[2]
வீதிவாய்க் கேட்டலுமே [3]விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்[4] என்னே! என்னே!
ஈதே [5]எந்தோழி பரிசேலோ ரெம்பா வாய்.[6] *(1)*

[சர்வபூத தமனி எழுந்துவந்து முதற் சத்தியுடனும் தோழியருடனுங்கூட மூன்றாம் சத்தியாகிய பலப்பிரத மனியை நோக்கிச் செல்லுகின்றனர்.]

"வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி"

(என முழங்குகின்றனர்.)

---

* திருவண்ணாமலையில் பாடப்பெற்ற இது முதலான திருவெம்பாவைப் பாடல்கள் இருபதினையும் இலக்கண நூலார் வெண்டளையால் வந்த இயல்தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்பர். தமிழில் உள்ள பா வகைகளில் கலிப்பா என்பது ஒன்று. அது தரவு – தாழிசை -தனிச்சொல்-சுரிதகம் என்ற உறுப்புக்களைப் பெற்றுவரும். இத்தரவு என்ற உறுப்பு ஒன்றுமே ஒவ்வொரு பாடலாய் அமைய, திருவெம்பாவை பாடப்பட்டுள்ளது. இதில் வெண்பாவின் தளை பொருந்தியிருக்கிறது. கொய்சகம் என்பது–கொச்சகம். ஆடைகளைக் கொசுவி மடிப்பது என்பது வழக்கம். அதனைக் கொசவம் என்ற உலக வழக்குச் சொல்லால் அறியலாம். ஆடை மாறி மாறி மடிக்கப்படுவதுபோலப் பாடலின் அடிதோறும் ஓசை மடித்து மடித்து வருதலின் கொச்சகக் கலிப்பா எனப்பட்டது.

1. உறங்குகின்றாயோ? 2. வீதியில் யாங்கள் வந்து 3. விம்மி விம்மி மெய்மறந்து வாழ்த்திய வாழ்த்தொலி கேட்டலும் என இயைக்க. 4. கிடந்தவளாகிறாய். (முன்னிலையில் படர்க்கை) 5. எமது தோழியாகிய உன் தன்மை. 6. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் வரும் "ஏலோரெம்பாவாய்" என்பதனை ஏல்–ஓர்–எம்–பாவாய் எனப்பிரித்து–எமது பாவைபோன்ற தோழி–யாங்கள் கூறுவதை ஏற்றுக்கொள் உணர்ந்துபார் எனப் பொருள் கொள்க.

சர்வபூததமனி—(*பலப்பிரதமனியைத் துயில் உணர்த்துகின்றாள்*)

சர்வபூததமனி:- *அணியழகி! அணியழகி!* என்ன இப்படி உறங்குகின்றாய்! இரவு பகல் எந்தநேரத்திலும் நாம் கூடிப் பேசும்போதெல்லாம் பரஞ்சோதியாகிய பெருமானிடத்தில் பாசம்வைத்துள்ளேன் என்று பேசுவாயே! இப்போது வாசமலர்ப் படுக்கைக்கே நேசம் வைத்துவிட்டாயோ?

பலப்பிரதமனி:- நல்லணி அணிந்த தங்கைமீர்! சீ! சீ! இவ்வவளவுதானா! இன்னும் பேசுவீர்களோ, விளையாட்டிலேயே என்னை ஏசுவதற்கு நல்ல இடம் பார்த்தீர்கள்! இதோ எழும்பிவிட்டேன்! இதோ எழும்பிவிட்டேன்! நானும் உங்கள் திருக்கூட்டத்துடன் கலந்துவிட்டேன். நாம் எல்லோரும் ஒளிமிக்க சிவலோகநாதனாகிய, தில்லையிலுள்ள சிற்றம்பலத்து ஈசனுக்கு உண்மை அன்பர்கள் அல்லவா! அவன் திருவடிகள் தேவர்கள் துதிக்கக் கூசும்! நாம் துதிக்க மகிழும்! அவன் அத் திருவடிகளை நமக்குத்தர வந்தருளுவான்! வாருங்கள், எல்லோரும் ஒன்றாய்த் துதிப்போம்.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும் போது எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ! நேரிழையாய்!
நேரிழையீர்
சீசீ! இவையும் சிலவோ! விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசுமலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாமாரேலோ ரெம்பாவாய் (2)

"ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றிச் சிவன் சேவடி போற்றி!"
நேயத்தேநின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!,

[என்று துதித்தவண்ணம்– மூவரும் ஒன்றுகூடித்–தம் தோழியருடன் நான்காம் சத்தியாகிய பலவிகரணியை நோக்கிச் செல்லுகின்றனர்.]

பலப்பிரதமனி-(*பலவிகரணியைத் துயில் உணர்த்துகிறள்.*)

பலப்பிரதமனி:- முத்தைப் போன்ற பற்கள் ஒளி வீசும், நல்லியல் நங்காய்! நல்ல தூக்கம்! நல்ல தூக்கம்! பண்டு நாங்கள் உன்னை நாடி வரும் போதெல்லாம் எங்களுக்கு முன்னே எழுந்து ஓடி வந்து எதிர்கொண்டு அழைப்பாய்! இறைவன் திருநாமத்தை முழங்குவாய்! உள்ளத்தில் இன்பம் சுரக்க என் அத்தன்! என் ஆனந்தன்? என் அமுதன்! என்று நாவில் நீர் ஊற இனிக்க இனிக்கப் பேசுவாய்! இப்பொழுதோ! படுக்கையினின்றும் எழுந்து வந்து வாயிற் கதவையும் திறவாது இருக்கின்றுயே! நன்று! நன்று!

பலவிகரணி:— என்னிடம் மிக்க அன்பு உடைய தோழிகளே! இறைவனின் பழைய அடியவர்கள் நீங்கள்! நல்ல பண்பு உடையவர்கள்! யானே புதிய அடியவள்! உங்களை எதிர் கொண்டழைக்காது ஏதோ! தவறு செய்துவிட்டேன். குற்றத்தை மன்னித்து என்னையும் உங்களுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்வதில் தவறு ஒன்றும் இல்லையே! இதோ வந்துவிட்டேன்! இதோ வந்துவிட்டேன்.

பலப்பிரதமனி :– வந்துவிட்டாயா! வா! வா! உன் அன்பெல்லாம் பொய் அன்பாகத்தான் இருக்கிறது! இதனை நாங்கள் அறியாதவர்களா என்ன? சித்தம் தெளிந்தவர்கள் நம் சிவபெருமானையன்றோ பாடுவர்! நீ எங்களைப் பாடுகின்றாயே! உன் வீட்டு வாயிலில் வந்து நின்று உன்னை எழுப்பும்படியும் நேர்ந்ததே! நீ அதற்கு மேலும் எங்களைப் பரிகசித்தும் பேசுகின்றாயே. இவ்வளவும் எங்களுக்கு வேண்டியதுதான்.

முத்தன்ன வெண்ணகையாய் முன் வந்து எதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட் கொண்டால் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய் (3)

[பலவிகரணியும் வந்து சேர்ந்து கொள்ளுகிறாள். அனைவரும் ஒன்றுகூடி ஐந்தாம் சத்தியாகிய கலவிகரணியை நோக்கிச் செல்லுகின்றனர்]

பலவிகரணி–(*கலவிகரணியைத் துயில் உணர்த்துகிறாள்.*)

பலவிகரணி·- முத்தேர் முறுவலாய்! உனக்கு மட்டும் இன்னும் பொழுதுவிடியவில்லையோ? இன்னும் உறங்குகின்றாயே!

கலவிகரணி:- [படுத்த வண்ணமே] இல்லை—இல்லை நான் விழித்துக்கொண்டுதான் இருக்கின்றேன்! சரி, அழகிய கிளிமொழிகளைப் பேசும் தோழியர் அனைவரும் வந்துவிட்டார்களா?

பலவிகரணி:- நீ படுத்திரு— ஒவ்வொருவரையும் எண்ணிக் கொண்டு உனக்குக் கணக்கைச் சரியாக ஒப்புவிக்கின்றோம். ஊம் - தூக்கத்தில் கேள்வி வேறு கேட்கின்றாயோ? கண்ணுறங்கிக் காலத்தை வீணாகக் கழிக்காதே. விண்ணவருக்கு அமுதமாய் இருப்பவனை வேதத்தின் மேலான பொருளாய் இருப்பவனை -கண்களால் காண்பதற்கு இன்பம் அளிப்பவனைப் பாடி உள்ளம் கசிந்து நின்று நாங்கள் உருகுகின்றோம்! எங்களால் எண்ண முடியாது! நீயே வந்து எல்லாரும் வந்தாரோ என்று எண்ணிக்கொள். இந்த இழிந்த நிலையில் தூங்காதே.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ!
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம்
அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம்
நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பவாய் (4)

[கலவிகரணியும் வந்து சேருகிறாள். எல்லோரும் சேர்ந்து ஆறாம் சத்தியாகிய காளியைநோக்கிச் செல்லுகின்றனர்.]

கலவிகரணி–(*காளியைத் துயில் உணர்த்துகிறள்.*)

கலவிகரணி:–*சாந்தணிந்த கூந்தலை உடையவளே! பாலும் தேனும் ஒழுகுவதுபோல இனிக்க இனிக்கப்பொய் மொழிகளையே பேசும் என் தோழி! திருமாலும் நான் முகனும்கூடக் காணமுடியாத மலைபோன்ற இறைவனை நாமே அறிவோம் என்று கூறும் நீ வாயிலை இன்னும் திறவாது இருக்கின்ருய்! மண்ணவரும் விண்ணவரும் மற்றைப் பொருள்களும் அறிய முடியாத இறைவனின் பேரழகையும் நம்மை ஆட்கொண்டு அருளும் சிறப் பையும் நாங்கள் எல்லோரும் பாடிச் சிவனே சிவ னே என்று முழங்கியும்கூட, தூக்கமயக்கத்தில் உணராது இருக்கின்ருயே! இதுதானு உன் திறம்! எழுந்திரு! எழுந்திரு!*

மாலறியா நான்முகனும் காணு மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ளப் பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக், கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண்!
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் (5)

[*காளியும் வந்து சேருகிறள்-எல்லோரும் சேர்ந்து ஏழாம் சத்தியாகிய ரௌத்திரியை நோக்கிச் செல்லு கின்றனர்*]

காளி–(*ரௌத்திரியைத் துயிலுணர்த்துகின்றள்.*)

காளி:– *மானே அனைய மங்காய்! நீ! நேற்று-நானே முன்னர்வந்துநீராட எல்லோரையும் எழுப்புவேன்என்று*

சொன்னுயே! இப்படி உறங்குவதுசரியா! உனக்கு வெட்கமாக இல்லையா? நேற்றுச் சொன்னசொல் எந்தத் திசையில் போயிற்ரு? அது போகட்டும்! உனக்கு மட்டும் இன்னும் பொழுது விடியவில்லையா? விண்ணவரும் மண்ணவரும் பிறவும் அறியமுடியாத பெருமான் எங்களுக்கு எளியவனுய்த் தானேஎங்கள்பால் வந்து அன்பு செய்து ஆட்கொண்டு அருளுவான். அவனது அழகிய திருவடிகளைப் பாடிவந்து நிற்கும் எங்களுக்காக உன் வாயிற்கதவைத் திறக்கக்கூடாதா? உடம்பும் உயிரும் உருகாது இருக்கின்ருயே! எழுந்துவா! உனக்கென்றே வாழும் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் தலைவனுக உள்ள பெருமானை எங்களுடன்கூடி நீயும் பாடு!

மானே நீ நென்னலை நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணுமே!
போனதிசை பகராய் இன்னம் புலர்ந்தின்ருே!
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித் தாட்கொண் டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனேர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் (6)

[*ரௌத்திரியும் வந்துசேருகிறள்-எல்லோரும் ஒன்று சேர்ந்து எட்டாம் சத்தியாகிய சேட்டையை நோக்கிச் செல்லுகின்றனர்.*]

ரௌத்திரி–(*சேட்டையைத் துயிலுணர்த்துகின்றள்.*)

ரௌத்ரி:- தாயே! இப்படி உறங்குவதும் பேசாதிருப்பதும் உன் விளையாட்டுக்களைச் சேர்ந்தனவோ? பல தேவர்களும் தங்கள் உள்ளங்களில் எண்ணுவதற்குக்

கூட இயலாத நிலையில் இருப்பவனும் தான் ஒருவனே தலைவனுய் உள்ளவனும், மிக்க புகழை உடையவனும் ஆகிய இறைவனது சின்னங்களாகிய கருவிகளின் ஒலியைக் கேட்ட உடனேயே சிவா! சிவா! என்று முழங்குவாயே! "தென்னுடுடைய சிவனே" என்று யாங்கள் முழங்கினல் "எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று நீயும் முழங்கி அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகுவாயே! யாங்கள் ஒவ்வொருவராக என் ஆனைபோன்றவனே! என் அரசனே! இனிய அமுதம் போன்றவனே! என்று சொல்லும் மொழிகள் உன் காதுகளில் கேட்கவில்லையா? இன்னுமா தூங்குகின்ருய்! வன்மனத்தையுடைய கீழோர்போல வாய்திறவாது படுத்திருக்கின்ருயே! என்னே! உன் தூக்கத்தின் தன்மை! நல்ல தூக்கம் எழுந்திரு! எழுந்திரு!

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அறியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னு என்னு முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்
என்னுனை என்னரையன் இன்னமுது என்று எல்லோரும்
சொன்னேம்கேள் வெவ்வேருய் இன்னம் துயிலுதியோ!
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (7)

[சேட்டையும் வந்துசேருகிறள். எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒன்பதாம் சத்தியாகிய-வாமையை நோக்கிச் செல்லுகின்றனர்]

சேட்டை-(வாமையைத் துயிலுணர்த்துகின்றள்.)

சேட்டை:- தோழீ! விடியற்காலம் ஆகிவிட்டதே! இன்னுமா தூங்குகின்றாய்? கோழிகள் கூவும் ஒலி உன் காதிற்படவில்லையா? நாரைமுதலியவைகளும்கூடஎங்கும் ஒலிக்கின்றனவே! இசை வல்லவர் சப்தஸ்வரங்களிலும் பாடுகின்றனரே! வெண்சங்குகள் முழங்குகின்றனவே! சிறப்புமிக்க மேலான ஒளிவடிவாய் உள்ள இறைவனின் உயர்ந்த கருணைத்திறம் புலப்படும்படி சிறந்த பொருள் தரும் பாடல்களைப் பாடுகின்றோமே! இப் பாடல்களுமா உன் காதுகளில் படவில்லை. வாழியோ! வாழி! இது என்ன உறக்கம்தானோ? எழுந்து வாயிலைத்திற. கருணைக் கடலாகிய இறைவனிடத்து நீ கொண்டுள்ள அன்பின் திறம் இவ்வளவுதானோ? (சக்ரத்தையுடைய திருமாலின் அன்புபோன்றதா உன் அன்பு) ஊழிக் காலத்தும் தான் ஒருவனேயாய்த் தனித்து நிற்கும் பெருமானை! எளியவர் பக்கம் என்றும் இருப்பவனை! நீயும் எங்களுடன் கூடிப் பாடுவாயாக.

* கோழி சிலம்பச் சிலம்பும் [1]குருகு எங்கும்
[2]ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
[3]கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ!
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய் (8)

---

1. நாரை முதலிய பறவைகள் 2. சப்தஸ்வரங்கள் 3. ஒப்பில்லாத

* இதுவரை உள்ள எட்டுப் பாடல்களும் தோழியர் ஒருவரை ஒருவர் துயிலுணர்த்துவதாக அமைந்துள்ளன. ஒன்பது-பத்துப் பாடல்கள் அனைவரும் சேர்ந்து பெருமானைத் துதிப்பதாக அமைந்துள்ளன.

[வாழையும் வந்து எண்மருடனும் கூடுகின்றார்கள். ஒன்பது சத்திகளும் ஒன்றுசேர்கின்றனர். மார்கழி நீர் ஆடி இறைவனை வழிபடுவதில் அனைவரும் ஒன்று படுகின்றனர். நீராடுவதற்குமுன் இறைவனைத் துதிக்கின்றனர்.] ஒன்பதின்மரும் ஒன்றுசேர்ந்து துதித்தல்.

முன்னே தோன்றி உள்ளனவாகிய பழமையான பொருள்கள் யாவற்றிற்கும் முன்னாகவே தோன்றிய பழைய பொருளாய் இருப்பவனே! இனிப் பின்னே எவை எவை புதியனவாய்த் தோன்றுமோ? அப்படித் தோன்றும் பொருள்கள் அனைத்திற்கும் புதியவனாய் இருப்பவனே! (இறைவனைத்தவிர பழமையானபொருள் ஒன்று இல்லை—இனிப் புதியனவாய்த் தோன்றும் சில பொருள்கள் வரினும் அவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு புதுப்பொருளாய் இறைவன் இருப்பான்). உன்னைத் தலைவனாகப் பெற்ற உன் அடியவர்களாகிய நாங்கள் உன் அடியவர்களின் திருவடிகளையே வணங்குவோம். அவ்வடியவர்களுக்கே நாங்கள் துணைவியர் ஆவோம். அவ்வடியவர்களே எங்கள் அன்பிற்குரிய கணவராவர். அவர்கள் விரும்பிச் சொல்லும் பணிகளையே சொல்லிய வண்ணம் அடிமைகளாய் இருந்து செய்து முடிப்போம், பெருமானே! இத்தகையவாழ்வையேதேவரீர் எங்களுக்கு அளிக்க வேண்டுகிறோம். அப்படி அளித்துவிட்டால் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்.
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவாக்கே பாங்காவோம்.

அன்னவரே எங்கணவர் ஆவர் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியால்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய் (9)

[மேலும் துதிக்கின்றார்கள்.]

அவர்களுள் ஒருத்தி:- பெருமானே! உனது திருவடியின் பெருமையை அளவிட வல்லார் யார்? உன் அடித் தாமரைகள் பாதாளங்கள் ஏழையும் தாண்டிச் சென்றிருக்கின்றன! அம்மட்டோ! சொல்லுவார் சொல்லையும் கடந்து அன்றோ இருக்கின்றன.

உன் மலர்நிறைந்த அழகிய முடியோ எல்லாப் பொருள்களுக்கும் முடிவாய் இருக்கின்றது. உமாதேவியாரை இடப்பாகத்தே கொண்ட அவ்வொரு வடிவோ? உன் வடிவு? நின்மலனாகிய நீ, நினைந்தபோது நினைந்த வடிவத்தை நிறுத்துவாய் அன்றோ? வேதங்கள் உன்னைத் துதிக்கின்றன. தேவர்கள் துதிக்கின்றனர்-மண்ணுலக மக்களும் துதிக்கின்றார்கள். ஆனால்! உன் பெருமைகள் அத் துதிகளுக்கு அடங்குகின்றனவோ? இல்லையே! நீ, உண்மை அடியாருக்குத் தோழனாகவே இருக்கின்றாய்! அடியவர்களது உள்ளத்தே அமர்ந்து இருக்கின்றாய்.

[பின்னர் தன் தோழியரை நோக்கி]

அரனாரது ஆலயப் பணிசெய்யும் நற்குலத்துதித்த நங்கைமீர்! இப்படி எல்லாம் நாம் துதிக்கின்றோமே அந்தப் பெருமானது ஊர் எது? பேர் எது? அவனுக்கு வேண்டப்பட்டவர்கள் யார்? அவனுக்கு வேண்டப்படாதவர்கள் யார்? அவனைப்பாடும் விதந்தான் என்ன? சொல்லுங்கள்!

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதம் முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன்தன் கோயில் பிணாப் பிள்ளை
காள்!
ஏது அவனூர் ஏது அவன்பேர் ஆர் உற்றார் ஆர்
அயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய்! (10)

[இப்படி இறைவனைத் துதித்தவண்ணம் மடுவை நோக்கிச் செல்லுகின்றனர்-புண்ணிய நீரில் மூழ்த வோர்-இந்நாளில் இந்த வேளையில் இப் புண்ணிய நீரில் மூழ்தகின்றேன்-இந்தப் பலனைத் தரவேண்டும் என்று சங்கற்பம் செய்துகொள்வது முறை. அப்ப டியே இப் பெண்களும் நீர் நிலையில் இறங்கி நின்று திருவடிகளைத் துதித்துத் தங்களைக் காக்க வேண்டு கின்றனர்கள்.]

[அனைவரும் தண்ணீரில் நின்று ஒருசேரத் துதிக்கிறார்கள்.]

அழல்போன்ற செம்மேனி அம்மானே! வெண்ணீ றணிந்த வித்தனே! எல்லாச் செல்வங்களையும் தருகின்ற வனே! நுண்ணிய இடையைக்கொண்ட, மையணிந்து அகன்றுள்ள கண்களைக்கொண்ட உமாதேவியின் மண வாளனே! உனக்கு வழி வழி அடிமைசெய்து! பெருவாழ் வடைந்துள்ளோம். வண்டுகள் மொய்க்கின்ற நீர் நிரம் பிய அகன்ற இப் புண்ணிய நீரில் முகேரென்று புகுந்து மூழ்கி நீரைக் கையால் துழாவித் துழாவி உன் திருவடி களைப்பாடிப் பெரும் பேறடைந்தோம். அனைத்துயிரை

யும் நீ ஆட்கொண்டு, பேரருள்புரிவதற்குச் செய்யும் காத்தும்-படைத்தும்-கரந்தும் விளையாடும் விளையாட்டுக்களில் பிழைக்கும் மெய்யடியார்கள் பிழைத்துக்கொள்ளும் * வழிகளில் எல்லாம் நாங்களும் பிழைத்துக்கொண்டோம்; ஆதலின் எங்களையும் தளராது காப்பாற்றுவாயா!

p மொய்யார் தடம்பொய்கை புக்கு [1]முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்து ஒழிந்தோம்.
[2]எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய் (11)

* பிழைக்கும் வழிகள்

ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்

---

1 திடீரென என்பதுபோல-ஒலிக்குறிப்பை உணர்த்தும் ஓர் இடைச்சொல்.

p பாடல் பதினொன்றுமுதல் பதினெட்டு முடிய எட்டுப் பாடல்களும் நீராடும்போது பாடியன. 2. தளராமல்.

எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள்தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகல் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்

(திருவாசகம் போற்றித் திருவகவல்)

[*என்று பாடியவண்ணம் நீராடுகின்றார்கள்.*]

அவர்களுள் ஒருத்தி:-

தோழிகளே! நம்மைப் பிணித்திருக்கின்ற பிறவித் துன்பம் நம்மைவிட்டு நீங்கும்பொருட்டு நாமெல்லாம் ஆரவாரித்து நீராடுவதற்குக் காரணனாய் இருக்கின்றான் நம் பெருமான். நல்லதில்லையம்பலத்திலே அங்கையில் அனலேந்திக் கூத்தாடுகின்றான். அவ்வற்புதக் கூத்தால்

வானுலகையும் மண்ணுலகையும் நம் அனைவரையும் படைத்துக் காத்துத் துடைத்து விளையாடுகின்றவனாக இருக்கின்றான். அவனது திருவார்த்தைகளையும் நாம் பேசி, கைவளையல்கள் ஒலிப்பவும் நீண்ட ஆடைகள் ஒலிக்கவும், அழகிய கூந்தலில் மொய்த்திருக்கின்ற வண்டுகள் பாடவும், பூக்கள் விளங்கும் இப் பொய்கையின் நீரைக் குடைந்து, நம்மையெல்லாம் உடைமைகளாக உடைய பெருமானது அழகிய பாதங்களையும் துதித்து நீராடுவோமாக.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன், நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோரெம்பாவாய் (12)

[அப்படி நீராடும்போது ஒரு தோழியைப் பார்த்து ஒருத்தி-தோழீ! தோழீ! என் உள்ளத்தே என்னை அறியாமலே ஒரு இன்பம் எழுகின்றதே! அதனை என்னென்று சொல்லுவேன். அந்த ஆனந்தத்தை நான் அறிகின்றேனே தவிர எடுத்துச்சொல்ல என்னால் இயலவில்லையே! ஆனால் என் கண்முன் காணப்படுபவை அனைத்தும் கடவுட் காட்சியையே அளிக்கின்றன. என்றுகூறி நீராடும் மடு, இறைவியாகவும் இறைவனாகவும் காட்சியளிப்பதைக் கூறுகின்றாள்.]

இதோ பார்! நாம் நீராடும் இம்மடுவில் பசுமையான கரிய குவளை மலர்கள் பூத்திருக்கின்றன. இப்பூக்கள் இறைவியின் கண்களாகவே எனக்குத் தோன்றுகின்றன. அன்றியும் இம்மலர்களைக் கண்டவுடன் பெருமானது நீலகண்டத்திடத்தன்றோ என் நெஞ்சம் செல்லுகின்றது. அதோ பார் பசுமையான செந்தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன. இம்மலர்கள் இறைவியினுடைய - முகம், கை, திருவடி முதலிய உறுப்புக்களையும் இறைவனுடைய திருவடிகளையும் ஒத்திருக்கின்றன. அதோ! அங்கே அழகிய நாரைகள் உட்கார்ந்திருக்கின்றன பார். பல பாம்புகளும் தோன்றுகின்றன. அல்லாமலும் மடுவின் பல இடங்களிலும் நம்மைப் போன்று பலரும் மனம் உருகி நிற்கின்றார்கள். அவ்வுருக்கத்தால் அருட்பாடல்களைப் பாடி ஆரவாரிக்கின்ற பேரொலி எழும்புகின்றது. சிலர் தங்களது மேனியழுக்கைப் போக்க இம்மடுவில் மூழ்குகின்றனர். அல்லாமலும் இது புண்ணிய நீர் ஆதலால் இதில் மூழ்கி அகஅழுக்காகிய மும்மலங்களையும் அகற்ற முற்பட்டிருக்கின்றார்கள். இறைவனும் தம்மை அடைந்தாரது மல அழுக்கைப் போக்குகின்றான் அல்லவா? மடுவில் தோன்றும் பாம்புகள்

"பாம்பினாற்கடி சூத்திரம் கோவணம் [1]பசுந்தாள்
பாம்பினாற்புரி நூல்சன்ன வீரம்வெண் பகுவாய்ப்
பாம்பினாற்குழை குண்டலம் பாதகிண் கிணிநாண்
பாம்பினாற்கர கங்கணம் பரித்தனர் வந்தார்"
(திருவிளை - திருவாலவாய்)

என்றபடி இறைவனது மேனியில் தோன்றும் பாம்புகளாகக் காட்சியளிக்கின்றன.

---

1 பசுமை தாள். இங்கே பசுமை இன்மை என்ற பொருளாய் காலில்லாத எனப் பொருள் படுகின்றது.

இவற்றை எல்லாம் நோக்கும் பொழுது இம்மடு இறைவியாகவும் இறைவனாகவுமே எனக்குக் காட்சியளிக்கின்றது. இத்தகைய நீர் நிரம்பிய இம்மடுவில் நாம் எல்லோரும் புகுந்து, பாய்ந்து - பாய்ந்து நமது கை வளையல்கள் ஒலிக்கவும், காற்சிலம்புகள் ஒன்று சேர்ந்து கலிக்கவும், தனங்கள் விம்மவும், மடுவின் நீர் நீராடும் அதிர்ச்சியால் மேலெழும்படி முழுகி விளையாடுவோம் வா.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்
பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்புகலந் தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம் புனல்பாய்ந்து ஆடலோ
ரெம்பாவாய் (13)

[*அப்படி நீராடும்போது ஒருத்தி மற்றொருத்தியைப் பார்த்துக் கூறுகின்றாள்.*]

பெண்ணே! நமது காதணிகள் அசையவும்; பசிய பொன்னால் செய்யப்பெற்ற மற்றைய ஆபரணங்கள் அசையவும்; மாலை சூடிய கூந்தல் அசையவும்; அக் கூந்தலில் மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டுகள் ஆடவும் இக் குளிர்ந்த நீரில் நீராடுவோம்! இறைவனது சிற்றம்பலத்தைப் பாடுவோம். வேதப்பொருள்களை முழங்குவோம்; அவ் வேதங்களில் கூறப்படும் உண்மைப் பொருளாய் இறைவன் இருக்கும் திறத்தினைப் பாடுவோம். ஒளிவடிவினனாகிய இறைவனின் இயல்புகளைப் பாடு

வோம். அவன் அணிந்திருக்கின்ற கொன்றை மலர் மாலைகளைப் பாடுவோம். அனைத்திற்கும் முதல்வன் அவனுகவே நிற்கும் திறத்தினைப் பாடுவோம்! அவனே அனைத்திற்கும் அந்தத்தைச் செய்கின்ருன் என்பதைப் பாடுவோம். செயலற்று, கேவலநிலையில் கிடந்த உயிர்களாகிய நம்மை! சகலமும் பெற்று இப் பிரபஞ்ச வாழ்வில் வாழுமாறு செய்து ஆட்கொண்ட திருவருட் சத்தியாகிய அன்னையின் திருவடிகளின் திறத்தினைப் பாடுவோம். பின்னர் நீராடுவோம்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய் (14)

[இப்படியாக இறைவன் திறத்தே ஈடுபட்டவர்கள் தம்வசம் இழந்து நீராடுகின்றனர்கள். மெய்மறந்து நிற்கும் ஒருத்தியைக்கண்டு மற்றொருத்தி தோழியர்களிடம் வியந்து உரையாடுகின்றாள்.]

கச்சும் அணியும் அணிந்த அழகிய தனங்களையுடைய தோழிகளே! பார்த்தீர்களா இவள் திறத்தை! இது என்ன இப்படி மெய்மறந்து நிற்கின்ருள்! முன்பெல்லாம் மனம் ஆனந்தவெள்ளத்து ஆழ நமது பெருமானது சிறப்புகளை எல்லாம் ஒருகாலும் இடைவிடாது கூறிக்கொண்டிருப்பாள்! அப்படிப்பட்டவள் பேச்செல்லாம் இப்போது அடங்கிவிட்டனவே! இடையிடையே

ஒவ்வொருமுறை எமது பெருமான்! எமது பெருமான்! என்று மட்டும்தானே சொல்லுகிருள். இடைவிடாது பொழிகின்ற நீண்ட தாரைகளையுடைய கண்ணீரால் இவள் கண்கள் குளிர்ந்துவிட்டனவே!

இம்மண்ணுலகிலே என்னை ஆட்கொள்ளும் பொருட்டு ஒருகால் வரவிருக்கின்ற தேவனை என்றும் வணங்குகிறவள் இன்று வணங்காதே நிற்கின்ருளே! பேரரசனுகிய பெருமானுக்கு அன்புடையவராய், இவ் விதம் பித்தர்போல் ஆவார் இவ்வுலகத்தில் இவளன்றி வேறு யாருளர்? இப்படி யெல்லாம் ஆட்கொள்ளுகின்ற பேரறிவு படைத்த பெருமானை வாயால் முடிந்த மட்டும் நாமும் பாடுவோம் வாருங்கள்! அழகிய நிறம் மிகுந்த பூக்களையுடைய இம் மடுவில் நீராடுங்கள்!

ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் [1]வந்து எனை ஆள் விண்ணோரைத் தாள் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய் (15)

1, வந்தனையாள்-பி,ம்)-பூமியின்மேலே ஒரே முறையாக விழுந்து வணங்குகின்ருள்; இதற்கு விண்ணோரைத் தாள் பணியாள் என்றவிடத்து: மற்றத் தேவர்களைவணங்கமாட்டாள் என்று பொருள் காணப்படுகிறது.

[இப்படியாகப் பெண்கள் நீராடும்போது மழையும் பொழிகின்றது. இறைவனது அருள்வெள்ளத்தில் திளைத்திருக்கின்ற அவர்களுள் ஒருத்திக்கு அம் மழை கருணைமழையாகக் காட்சியளிக்கின்றது. ஒருத்தி மடுவினை இறைவியாகவும்-இறைவனாகவும் கண்டது போல; இவள் மழையினை இறைவியின் கருணையாகவே காண்கிறாள்.]

(அவள் மழையை நோக்கிப் பேசுகின்றாள்.)

மழையே! மழையே! நீ முற்பட்டுப்போய் கடல் நீரைப் பருகி வா! எம்மையெல்லாம் அடிமைகளாக உடைய இறைவியைப் போல் கருநிறங் கொண்டு வா. அவளது சிற்றிடைபோல மின்னல்களை உண்டாக்கி அவளது திருவடிகளில் அணிந்துள்ள பொற்சிலம்புகளைப் போல இடியொலியை முழக்கு! அவளது அழகிய புருவத்தைப்போல வானவில்லினைத் தோற்று. எங்களையெல்லாம் ஆட்கொண்டுள்ள இறைவி தன்னைப் பிரியாத நமது தலைவனாகிய சிவபெருமானின் மெய்யடியார்களுக்கு முற்படுகின்ற அவள்; எளியேங்களாகிய எங்களுக்கும் முற்பட்டுச் சுரக்கின்ற இன்னருளைப் போல மழையைப் பொழி!

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் (16)

[இப்படி ஒருத்தி இறைவியின் கருணையை வியந்து கூறியதைக்கண்ட மற்றொருத்தி இறைவனின் கருணையை வியந்துபேசமுற்படுகின்றாள்.]

நறுங்கூந்தல் நங்காய்!

செங்கண்ணனாகிய திருமாலிடத்தும், திசைமுகனாகிய பிரமனிடத்தும், மற்றைத் தேவர்களிடத்தும், மற்றெவ்விடத்திலும் இல்லாத ஒரு பேரின்பம் ஆன்மாக்களாகிய நமக்குக் கிடைப்பதற்காக [வண்ணான் மாசு சேர்ந்த உடையினைத் தூய்மைப் படுத்துவதற்கு, உவர் மண் போன்ற மாசுகளை முன்னர் அவ்வுடையுடன் கலந்து; அதனுடன் இருந்த மாசினைப் போக்குவது போல] மலச் சேர்க்கை உடைய நம்மையெல்லாம், புவன போகங்களாகிய குற்றங்களுக்குட்படுத்தி; நல்லறிவு வந்த காலையில்; இவ்வுலகிலேயே நமது உள்ளக்கோயில்களில் எல்லாம் தானே எழுந்தருளி; சிவந்த தாமரை மலர் போன்ற அழகிய திருவடிகளைத் தருகின்ற பேராற்றல் படைத்தவனை; கருணை நோக்குடைய இறைவனை அடியவர்களாகிய நமக்கு நிறைந்த அமுதம் போன்றவனை. நமது தலைவனைப் பாடி, எல்லா நலங்களும் நமக்கு ஏற்பட இந்தத் தாமரை பூத்த மடுவிலே நீராடுவாயாக.

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் [1]கோது ஆட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியேங் கட்கு ஆரமுதை

---

1. கோது-குற்றம் (சாரமற்றது) "சேதனம் என்னும் அச்சேறு அகத்து இன்மையால்-கோதென்று கொள்ளாதாம் கூற்று"

நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப்பூம் புனல்பாய்ந்து ஆடேலோ
ரெம்பாவாய் (17)

[பொழுது விடிகிறது. அதற்கு ஆன அறிகுறிகள் தோன்றுகின்றன. அவர்களுள் ஒருத்தி விடியற்காலத்தின் தோற்றத்தினையும் இறைவனது இயல்பினையும் புகழ்ந்துபாட அனைவரும் நீராடுகின்றனர்]

பெண்ணே!

இதோ பார் விண் மீன்கள் எல்லாம் குளிர்ந்த ஒளி மழுங்கி மறைகின்றன. (காலைச் சூரியன்) ஆதலினாலே காண்கின்றவர்களின் கண் பார்வையுள் அடங்கும் உதய சூரியன் வர இருளும் மறைகின்றது. செங்கதிரவனைக் கண்டு இவ்விண் மீன்கள் மறையும் காட்சி, திருவண்ணுமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருவடித் தாமரைகளை அடைந்து, தேவர்கள் தமது முடிகள் அவ்வடிகளால் படும்படி வணங்கும் போது, பெருமானது திருவடிகளின் பேரொளிக்கு முன். தேவர்களின் முடி மணிகளின் சிற்றொளிகள் மழுங்குவது போன்று அன்றோ இருக்கின்றது? பெண்ணும் ஆணும், அலியும் ஒளி மிக்க வானமும்,மண்ணும் ஆகிய எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கும் தன்மையால் ஒன்றாகியும், (அவையே ஆகியும்) தலைவனாய் இருந்து அவற்றை இயக்குதலின், இத்தனை பொருள்களுக்கும் வேறாகியும் (தானே ஆகியும்) நம்மிடத்தே மன்னி நின்று நமக்கெல்லாம் ஆரமுதமாய் இனித்தலின்; உடனாகியும் (அவையே தானே ஆகியும்) இருக்கும் பெருமானது திருவடிகளை நாம் எல்லாம் பாடுவோமாக! இப்பூஞ்சுனையில் நீராடுவோமாக!

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற் போல்
[1]கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்
[2]தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப்பூம் புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய் (18)

[இப்படி சீராடி இறைவனைத் துதிப்பதெல்லாம் பெருமானுடைய அருளைப் பெறுவதற்கு அன்றோ? பெண்கள் அனைவரும் நீராடிப் பரமனைப் பாடி, இப் பாட்டில் நோன்பால் தாம் பெற இருக்கும் பலனைத் தருமாறு இறைவனை வேண்டுகின்றார்கள்.]

பெருமானே! நாங்களெல்லாம் உன் கைக்கு உட்பட்டிருக்கும் சிறு குழந்தைகள்! உனக்கே என்றென்றும் ஆட்பட்டிருக்கின்றோம்! (நீ உணர்த்த எதையும் அறிவோமே தவிர, நாங்களாகவே அறியும் ஆற்றலற்றவர்கள்.) இவை என்றுமுள்ள பழைய வார்த்தைகளே! இப் பழைய வார்த்தைகளையே மீண்டும் புதியனவாய் உன்னிடம் பேசுகின்றோம். நீ யாது கருதுவாயோ என்று அஞ்சிப் பேசுகின்றோம். கோபியாது இருப்பாயாக. பன்னாளும் அழைப்பொழியாது இருந்தால் நீ எதிர்ப்பாடுவாய் என்ற எண்ணத்தோடே அழைத்து வேண்டுகின்றோம். எமது தனங்கள் உனது மெய்யடியாரது தோள்களோடு சேர்க! (உன்னிடத்தே மெய்யன்புடைய அடியவர்களே எங்களுக்கு நாயகர்களாக வர

1 காண்பார் கண்ணுக்கு அடங்கும். 2 குளிர்ச்சி பொருந்திய

வேண்டும்) எமது கைகள் உனக்குப் பணிசெய்வதைத் தவிர வேறு பணிகளைச் செய்யாது இருக்கட்டும்! இரவு-பகல் எப்பொழுதும் எங்கள் கண்கள் உன் திருவடியையன்றி வேறொன்றையும் காணாது ஒழிக. இப்படிப்பட்ட ஆனந்த நிலையைத் தேவரீர் எங்களுக்குத் தந்துவிட்டால் சூரியன் கிழக்கே எழும்பினால் என்ன? தெற்கே எழும்பினால் என்ன? அதைப்பற்றி நாங்கள் கவலைகொள்ளமாட்டோம். உன் அருளிலேயே திளைத்திருப்போம். இப்பேரருளை எங்களுக்குச் செய்க.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோ
ரெம்பாவாய் (19)

[சிற்றுதவி செய்தாருக்கும் வணக்கம் தெரிவிப்பது மனிதப் பண்பு-அதைப்போலவே தமக்குப்பேரருளைச்செய்த பெருமானுக்கு மார்கழி நீராடும் பெண்கள் வணக்கம் தெரிவிக்கின்றனர். இதனுடன் மார்கழி நீராடலாகிய நோன்பினை முடிக்கின்றனர்.]

எங்களைக் காப்பாற்றும் பெருமானே!

மார்கழி நீராடுகின்ற யாங்கள்—எப்பொருளுக்கும் முதலாயுள்ள நின் திருவடிகளை வணங்குகின்றோம்! (ஈற்

றடியில் உள்ள போற்றி) அப்படியே எவற்றிற்கும் முடிவாய் உள்ள நினது செவ்விய இளந்தளிர் போன்ற திருவடிகளை வணங்குகின்றோம்! எல்லா உயிர்களும் தோன்றுவதற்குக் காரணமாய் இருக்கும் அழகிய திருவடிகளை வணங்குகின்றோம். (படைத்தல்) எல்லா உயிர்களுக்கும் உலக வாழ்வின் இன்பத்தைக் கொடுக்கின்ற நினது அழகிய திருவடிகளை வணங்குகின்றோம். (காத்தல்) எல்லா உயிர்களும் இப் பிரபஞ்ச வாழ்வில் அடைந்த துன்பத்தைப் போக்குவதற்காக, இளைப்பு நீங்கும் வண்ணம் ஒடுக்கும் நின் திருவடிகளை வணங்குகின்றோம் (அழித்தல்) திருமாலும் பிரமனும் காணமுடியாதபடி மறைத்தலைச் செய்யும் தாமரை மலர் போன்ற நின் திருவடிகளை வணங்குகின்றோம், (மறைத்தல்) நாங்கள்பிழைக்கும் வண்ணம் எங்களை ஆட்கொண்டு அருளுகின்ற நின் திருவடிகளை வணங்குகின்றோம் (அருளல்) ஆதலின் அருளுக அருளுக. (முதல் இரண்டடியிலும் உள்ள அருளுக என்ற சொற்கள்)

போற்றி [1]அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி [2]அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற் பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

1, 2, தெளிவுபற்றி இருமுறை வந்தன. இப்பாடல் இறைவன் ஆதியும் அந்தமுமாய் இருப்பதையும்; ஐந்தொழில் புரிவதையும் உணர்த்துகின்றது.

போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்
மலர்கள்
[3]போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோ ரெம்பாவாய்.(20)

திருவெம்பாவை உரையாடல் முற்றிற்று.

திருவெம்பாவை திருவம்மானைக் கருத்து.

மலஇருள்உற்று உறங்காமல் மன்னுபரிபாகர் அருள்
செலமுழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை
நலமுறும் அந்தணர் வடிவாய் நாரணன்காண் பரியபதம்
நலமதில் வந்துஆள் கருணை நினைந்தாடல் அம்மானை.

(திருப்பெருந்துறை-பழைய புராணம்)

3. காக்கும் பெருமானே,

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளி எழுச்சி உரை.

*திரோதான சுத்தி

x எண்சீர்க் கழிநெடில் அடி ஆசிரியவிருத்தம்.

திருப்பெருந்துறையில் அருளிச் செய்தது

போற்றியென் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (1)

பதவுரை.— என் - என்னுடைய, வாழ் முதல் ஆகிய - வாழ்விற்கு மூல காரணமாய் இருக்கின்ற, பொருளே - பரம்பொருளாகிய பெருமானே; போற்றி - உன்னை வணங்குகின்றேன். புலர்ந்தது - பொழுது விடிந்துவிட்

---

* ஐந்தொழில்களில் ஒன்று. திரோதானம் - மறைத்தல். அது சுத்தியாவது என்பது நீங்குதலாம். விடியற்காலையில் இருள் நீங்க ஒளி எழுதல் போல இறைவன் மறைத்தலை நீக்க உயிர்கள் ஞான ஒளி பெறுகின்றன. எழுந்த இறைவன் பணி புரியுமாறு கூற ஆர்வமுடன் கேட்டு உயிர்கள் இறைவனுக்கு அன்பு செய்கின்றன. ''துயிலெடை நிலை'' என்ற புறத்துறை ஈண்டு சிந்திக்கத் தக்கது.

x ஆசிரியம் – தமிழ்ப்பாவில் ஒன்று. விருத்தம் – அப்பாவின் ஒரு வகை. அது எட்டுச் சீர்களைக்கொண்ட மிக நீண்ட அடிகளால் அமைவது.

டது. நின் துணை பூங்கழற்கு - உனது அழகிய திருவடி களில்; இணை மலர் கொண்டு - அத்திருவடிகளுக்கு இணை யான மலர்களைக் கொண்டு வந்து, ஏற்றி - நிரப்பி (அதற்கு மாருக) நின் திருமுகத்து - உனது அழகிய முகத்திலே, எமக்கு - எங்களுக்காக, அருள் மலரும் - அருளைப் பெருக்குவதைப் புலப்படுத்தும், எழில் நகை கொண்டு - அழகிய புன்சிரிப்பை ஏற்றுக்கொண்டு, நின் திருவடி தொழுகோம் - உனது அழகிய பாதங்களை வணங்குவோம். சேற்று - சேற்றிலே, இதழ்க் கமலங் கள் மலரும் - இதழ்களை உடைய தாமரைகள் மலரும், தண் வயல் சூழ் - குளிர்ந்த வயல்களால் சூழப் பெற்ற, திருப்பெருந்துறை - திருப்பந்துறையாகிய தலத்திலே, உறை - வீற்றிருக்கின்ற, சிவபெருமானே - பரம்பொரு ளாகிய பெருமானே. ஏற்று உயர்கொடி உடையாய், இடபம் (காளை) எழுதப் பெற்று உயர்ந்திருக்கின்ற கொடியை உடையவனே, எனை உடையாய் - என்னை அடிமையாக உடையவனே; எம்பெருமான் - அடியார் களாகிய எங்களுக்கெல்லாம் தலைவனே! பள்ளி எழுந்து அருளாய் - படுக்கையினின்றும் எழுந்தருளுக.

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்
திரள்நிறை அறுபதம் முரல்வன இவையோர்
திரும்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே பள்ளி எழுந்தரு ளாயே! (2)

(ப-உ) திருப்பெருந்துறை உறை- திருப்பெருந்துறை என்கின்ற தலத்திலே, எழுந்தருளியிருக்கின்ற, சிவ பெருமானே - சிவ பரம்பொருளே! அருள் நிதி-அரு

ளாகிய பெருஞ் செல்வத்தை, தர-எங்களுக்குக் கொடுக்க, வரும் - வருகின்ற, ஆனந்த மலையே - பேரின்ப மலையாய் இருப்பவனே! அலைகடலே - அலைகளை உடைய கடல் போன்றவனே! அருணன் - (சூரியனின் வருகையை முன்னர் உணர்த்த அவனது தேர்ப்பாகனாகிய) அருணன். இந்திரன் திசை - (அஷ்ட திக்பாலர்களில் ஒருவனாகிய) இந்திரனுக்கு உரிய கீழ்த்திசையில், அணுகினன்-தேரின் முன் பகுதியில் அமர்ந்துள்ளமையின் சூரியனுக்கு முன் தோற்றமளிக்க) வந்துவிட்டான், இருள் போய் அகன்றது - இருட்டு மறைந்து சென்றுவிட்டது. நின் - உன்னுடைய, கருணையின் - கருணையினைக் கொண்ட, மலர்த் திருமுகத்தின் - தாமரை மலர் போன்ற அழகிய முகத்தைப் போல, உதய சூரியன் எழ எழ - காலைச் சூரியன் தோன்றத் தோன்ற, (மற்று - அசை) அங்கண் - அவ்வமயத்தே, ஆம் - நீர் நிலையில் தோன்றியுள்ள; அண்ணல் நயனம் கடி மலர் - பெரியோனாகிய உனது கண்களுக்கு ஒப்பான மணம் மிக்க தாமரை மலர்கள், மலர -அச்சூரியனைக் கண்டு விரிய; திரள் நிரை-கூட்டமாகக் கூடியுள்ள, அறுபதம்-ஆறு கால்களையுடைய வண்டுகள் முரல்வன -ரீங்காரம் செய்கின்றன, இவை ஓர் - இந்நிகழ்சிகளைக் கருதுக. பள்ளி எழுந்தருள் - படுக்கையிலிருந்து எழுந்தருளுக.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (3)

(ப-உ) தேவ - தேவனே; திருப்பெருந்துறை உறை சிவபெருமானே, திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! யாவரும் - எவரும், அறிவு அரியாய் - அறிவதற்கு முடியாதவனே! எமக்கு - அடியேங்களாகிய எங்களுக்கு, எளியாய் - எளிமையில் அருள் செய்பவனே! எம்பெருமான் - எங்களுக்குத் தலைவனே; பூங்குயில் கூவின - அழகிய குயில்கள் கூவிவிட்டன. கோழி கூவின - கோழிகளும் கூவிவிட்டன. குருகுகள் - பிற பறவைகளும், இயம்பின - ஒலித்துவிட்டன. சங்கம் இயம்பின - சங்குகளும் ஒலித்துவிட்டன. தாரகை ஒளி ஒவின - நட்சத்திர வெளிச்சங்கள் மறைந்தன. உதயத்து ஒளி ஒருப்படுகின்றது - சூரிய உதயத்தின் ஒளி தோன்றிவிட்டது. இந்தநேரத்திலே, நமக்கு - எங்களுக்கு; விருப்பொடு - விருப்பத்தோடு, நல் - நல்ல, செறிகழல் - வீரக்கழல் செறிந்த, தாள் இணை - திருவடிகள் இரண்டையும் காட்டாய் - காட்டியருளுவாயாக. பள்ளி எழுந்தருளாய் - படுக்கையிலிருந்து எழுந்தருளுவாயாக.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (4)

(ப-உ) திருப்பெருந்துறை உறை சிவபெருமானே - திருப்பெருந்துறை என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானே! என்னையும் - எளியேனாகிய என்னைக் கூட, ஆண்டு கொண்டு - அடியவனாய் ஆட்கொண்டு,

இன்னருள் புரியும் - இனிய அருளைச் செய்கின்ற, எம்பெருமான் - எமக்குத் தலைவனே! (உன்னைத் துயிலுணர்த்துவதற்கும் துதிப்பதற்கும்) இன்னிசை வீணையர் - இனிய இசையைத் தருகின்ற வீணை வாசிப்போரும், யாழினர் - யாழை வாசிப்போரும், ஒருபால் - உன் சந்நிதியின் ஒரு பக்கத்தே நிற்கின்றனர்; இருக்கொடு - வேதத்தோடு, தோத்திரம் - உன்னைத் துதிக்கும் பாடல்களை, இயம்பினர் - கூறுகின்றவர்களும், ஒருபால் - ஒரு பக்கத்தில் நிற்கின்றனர்; துன்னிய - நெருங்கிய, பிணை மலர் - கட்டப்பட்ட மலர்மாலையை, கையினர் - கையில் ஏந்தியவர்களும், ஒருபால் - ஒரு பக்கத்தில் நிற்கின்றனர். தொழுகையர் - உன்னை வணங்குகின்றவர்களும், அழுகையர் - ஆனந்த மேலீட்டால் அழுகின்றவர்களும், துவள்கையர் - அவச மிகுதியினால் மேனி துவண்டு நிற்போரும். ஒருபால் - ஒருபக்கத்தே நிற்கின்றனர். சென்னியில் - தலையின்மீது, அஞ்சலி கூப்பினர் - கைகுவித்து வணங்குகின்றவர்களும், ஒருபால் - ஒரு பக்கத்தே நிற்கின்றார்கள். (ஆதலால் அனைவருக்கும் காட்சியளித்தற்பொருட்டு) பள்ளியெழுந்தருளாய் - படுக்கையினின்றும் எழுந்தருளுக.

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (5)

(ப-உ) சீதம்கொள் - குளிர்ச்சிபொருந்திய, வயல் - வயல்களால் சூழப்பெற்ற, திருபெருந்துறை - திருப்பெருந்

துறையில் எழுந்தருளியிருக்கும். மன்னு - அரசே, சிந்தனைக்கும் - நினைவிற்கும், அரியாய்-எட்டாதிருப்பவனே! பூதங்கள் தோறும் - நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பூதங்களிலும், நின்ருய் என்னின் - நீ இருக்கிருய் என்று (சில புலவர்) கூறினல்; புலவோர் - அதைக் கேட்ட மற்றைப் புலவர்கள், அல்லால் - நீங்கள் கூறுவதே அல்லாமல், போக்கிலன் - வரவிலன் என - இறப்பும் பிறப்பும் இல்லாதவனுகவும் இருக்கின்ருன் இறைவன் என்று கூறி, நின்னை - உன் மீது, கீதம் - பாடல்களை; பாடுதல் - பாடுதலையும், ஆடுதல் - ஆனந்தக் கூத்தாடுதலையும், அல்லால் - செய்வதை அல்லாமல், உன்னைக் கண்டறிவாரை - உன்னை நேரில் பார்த்தறிந்தவர்களை; கேட்டறியோம் - இருக்கின்ருர்கள் என்று கேட்டுக்கூட அறிந்ததில்லை (உன்னைப் பற்றிப் பலர் பலவாறு பேசினும், உன்னை நேரில் கண்டார் ஒருவரும் இலர்), எங்கள் முன் வந்து - அப்படிப்பட்ட நீ தானுகவே எளியவர்களாகிய எங்கள் முன் தோன்றி, ஏதங்கள் அறுத்து - எங்கள் குற்றங்களைக் களைந்து, எம்மை ஆண்டு - எங்களை ஆட்கொண்டு. அருள் புரியும் - திருவருளைக் கொடுக்கும், எம்பெருமான் - எமது தலைவனே; பள்ளி எழுந்தருளாய் - படுக்கையை விட்டு எழுந்தருளுக,

[1]பப்பற [2]வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்கு கின்ருர்அணங் கின்மண வாளா
[3]செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே

1. பப்பு—பரப்பு, மனவிரிவு. 2. வீடு—பதமுத்தி நிலைகள். 3. செப்பு—வள்ளம், கிண்ணம்.

இப்பிறப்பு அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (6)

(ப-உ) அணங்கின் மணவாளா - உமையின் மணவாளனே, பப்பு - மனவிரிவு, அற - நீங்க; வீட்டு - பதமுத்திகளில் இருந்து உணரும், மெய்யை உணருகின்ற, நின் அடியார் - உன் அடியார்கள், வந்து - உன்பால் வந்து பந்தனை அறுத்தார்-பாசநீக்கம் பெற்றூர்கள் அவர் பலரும் - அவ்வடியார்கள் பலரும், மைப்புஉறு - மை பூசப்பெற்ற (அல்லது அன்புநீர் பெருகும்), கண்ணியர் மானுடத்தியல்பின் - கண்களையுடைய தலைவியர்கள் போல் ஆகி, மனிதத் தன்மையில் (நாயகன்-நாயகி என்ற பான்மையில்), வணங்குகின்ளூர்-நின்னைத் தொழுகின்றூர்கள். செப்பு உறு - கிண்ணங்களைப் போல் இருக்கின்ற, கமலங்கள் - தாமரை மலர்கள்; மலரும் - மலர்ந்திருக்கும், தண்-குளிர்ந்த, வயல்சூழ்-வயல்களால் சூழப்பெற்ற, திருப்பெருந்துறை உறை - திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும். சிவபெருமானே - சிவபெருமானே! இப்பிறப்பு-இம் மனிதப் பிறவியை; அறுத்து - போக்கி; எமை - எங்களை; ஆண்டு அருள்புரியும் - ஆட்கொண்டு அருள்புரிகின்ற; எம்பெருமான் - எமது தலைவனே, பள்ளி எழுந்தருளாய்-படுக்கையிலிருந்து எழுந்தருளுக.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (7)

(ப-உ) அது - இறைவனின் அத்தன்மையானது; பழச்சுவை என - பழச்சுவை போன்றது என்றும், அமுது என - அமுதம் போன்றது என்றும், அறிதற்கு அரிதென - பிறர் அறிவதற்கு முடியாததென்றும், எளிதென - பிறர் அறிவதற்கு எளிமையானது என்றும் இப்படி பலவாருகக் கூறி, அமரரும் அறியார் - தேவர்கள் கூட உன்னை அறியமாட்டார்கள்; இது - இதுவே, அவன் திருவுரு - அவன் திருவுருவாகும், இவன் அவன் - இவனே அப் பரம்பொருள், எனவே - என்று நாங்கள் எல்லாம் உணர்ந்து சொல்லும்படி, எங்களை ஆண்டு கொண்டு - திருவுருவெடுத்து எங்களை ஆட்கொண்டு, இங்கு - இவ்வுலகத்திலே, எழுந்தருளும் - எழுந்தருளுகின்ற; மதுவளர் - தேன்மிகுந்த; பொழில் - சோலைகளால் சூழப்பெற்ற, திரு உத்தரகோச மங்கை உள்ளாய் - அழகிய உத்தரகோச மங்கை என்ற தலத்தில் எழுந்தருளியிருப்பவனே! திருப்பெருந்துறை மன்னு-திருப்பெருந்துறையிலும் வீற்றிருக்கின்ற அரசனே!, எமைப் பணிகொள்ளும் ஆறு எது, எங்களிடத்துத் தேவரீர் பணிவாங்கும் முறை எதுவோ? அது கேட்போம் — அம்முறைப்படியே அப் பணியைக் கேட்டு நடப்போம். எம்பெருமான் - எமது தலைவனே. பள்ளி எழுந்தருளாய் - படுக்கையினின்றும் எழுந்தருளுக.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் * எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி

* இறந்தகாலத்தாற் கூறினர், விரைவினை உணர்த்த.

அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே! (8)

(ப-உ) ஆர் அமுதே — நிறைந்த அமுதமே. முந்திய— முற்பட்ட. முதல் நடு இறுதியும் ஆனாய் — அனைத்திற்கும் முதலாகவும், இடைப்பட்ட பொருளாகவும், முடிவிலுள்ள பொருளாகவும் நீ இருக்கின்றாய். மூவரும்—பிரம விஷ்ணு, ருத்ரர்களும். அறிகிலர் — உன்னை அறியும் ஆற்றல் அற்றவர்களாக இருக்கின்றார்கள். (என்றால்) மற்றுயாவர் அறிவர் — வேறு யார்தான் உன்னை அறிவார்கள்?. பந்து அணை விரலியும் — விளையாடும்போது பந்து வந்து பொருந்துகின்ற விரல்களை உடைய திருவருட் சத்தியும் (விரலினது உருட்சியாலும் — திரட்சியாலும் பந்தைப் போன்ற விரல்களையுடைய என்று கூறுவாறும் உளர்), நீயும் - தேவரீரும், நின் அடியார் - உன்னுடைய அடியவர்களின், பழங்குடில் தோறும - பழைய குடிசைகள் தோறும், எழுந்தருளிய பரனே - அருள்செய்வதற்கு எழுந்தருளுகின்ற பெருமானே! செந்தழல்புரை - சிவந்த நெருப்பைப்போன்ற, திருமேனியும் காட்டி - உனது திருவடிவையும் அடியேனுக்குக் காட்டி, திருப்பெருந்துறை உறை - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற, கோயிலும் காட்டி - உனது கோயிலையும் காண்பித்து, அந்தணன் ஆவதும் - சிறந்த கருணை உடையவனாய் இருப்பதையும்; காட்டி - புலப்படுத்தி, வந்து - வலியவந்து, ஆண்டாய் - என்னை ஆட்கொண்ட பெருமானே! பள்ளி எழுந்தருளாய் - படுக்கையிலிருந்து எழுந்தருளுக.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயிர் ஆனாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! (9)

(ப-உ) விண்ணகத் தேவரும்; வானுலகில் உள்ள தேவர்கள்கூட, நண்ணவும் மாட்டா - அணுகவும் முடியாத (நினைக்கவும் கூட முடியாது என்றபடி), விழுப் பொருளே - மேலான பொருளே, உன் - உன்னுடைய தொழும்பு அடியோங்கள் - தொண்டு செய்யும் அடியவர்களாகிய நாங்கள், மண்ணகத்தே வந்து வாழ - இம் மண்ணுலகத்திலே வந்து வாழும்படி, செய்தானே, பேரருள் செய்த பெருமானே! வண் திருப்பெருந்துறையாய் - வளங்கள் நிறைந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கின்றவனே! வழியடியோம்-உனக்கு வழிவழி அடிமை செய்யும் எங்களது, கண்ணகத்தே நின்று - உள்ளத்தின் கண்ணே நின்று, களி தரு - இன்பத்தைத் தருகின்ற, தேனே - தேன்போல் இனியவனே! கடல் அமுதே - பாற்கடலில் எழுந்த அமுதம் போன்றவனே! கரும்பே-கரும்பு போல் இனிப்பவனே! விரும்பு உன்னை விரும்புகின்ற, அடியார் - அடியவர்களின், எண்ணகத்தாய் - எண்ணத்தில் இருப்பவனே! உலகுக்கு - சகல புவனங்களுக்கும், உயிர் ஆனாய் - உயிர் ஆக இருப்பவனே! எம்பெருமான் - எமது பெருமானே! பள்ளி எழுந்தருளாய் - படுக்கையிலிருந்து எழுந்தருளுக.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திருமாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்

அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே! (10)

(ப-உ) ஆர் அமுதே - நிறைந்த அமுதமே, இந்தப் பூமி - இந்த மண்ணுலகமானது, சிவன் - சிவபெருமான், உய்ய - உயிர்த் தொகுதிகள் வீடு பேறடைந்து பிழைக்கும் வண்ணம், கொள்கின்ற ஆறு - ஆட்கொள்ளுவதற்கு ஏற்ற வழியிடமாக இருக்கின்றது, நாம் - நாமெல்லாம் புவனியில் போய்ப் பிறவாமையில் - அம்மண்ணுலகில் போய்ப் பிறக்காத தன்மையில், அவமே நாள் - போக்குகின்றோம் - வீண் காலத்தைக் கழிக்கின்றோம், என்று நோக்கி - என்று எண்ணிப் பார்த்து, திருமாலாம் அவன் - திருமாலாகிய அவன்; விருப்பெய்தவும் - இம் மண்ணுலகில் வந்து தோன்றுவதற்கு விருப்பம் கொள்ளவும், மலரவன் - பிரமன், ஆசைப்படவும் - இம்மண்ணுலகில் வந்து பிறப்பதற்கு விருப்பம் கொள்ளவும், (அவர்களுக்கெல்லாம் உனது திருவருளைப் புரியாது), நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும் - உனது விரிந்த கருணையாகிய திருவருட்சத்தியும் நீயும், அவனியில் எம்மைப் புகுந்து - இம்மண்ணுலகில் வாழும் பெரும் பேறடைந்த எங்களிடத்தே வலிய வந்தடைந்து, ஆட் கொள்ள வல்லாய் - ஆட்கொள்ளும் வல்லமை உடையவனே! பள்ளி எழுந்தருளாய் - படுக்கையினின்றும் எழுந்தருளுக.

திருப்பள்ளி எழுச்சி உரை முற்றுப்பெற்றது.

திருத் தசாங்கம்—திருப்பள்ளி எழுச்சி

பேர்நாடு ராறுமலைபெயர்ஊர்தி படைமுரசு
தார்கொடியெ லாம்அரற்குச் சாற்றல் தசாங்கமதாம்
ஏர்மருவு திருப்பள்ளி எழுச்சிபணி விடைகேட்டு
ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்புசெயும் இயல்பே

(திருப்பெருந்துறை—பழைய புராணம்)

காவேரி கலர் பிரஸ்,
கும்பகோணம்.

காவேரி கலர் பிரஸ்,
கும்பகோணம்.